

கோயம்பேடு ரெயில் நிலையத்தில் மேற்கூரை அமைக்கப்பட்டு வருவதை படத்தில் காணலாம்.



மெட்ரோ ரெயில் பறக்கும் பாதையில் தண்டவாளம் அமைக்கப்பட்டுள்ளதையும், அருகில் கோயம்பேடு புறநகர் பஸ் நிலையம் தெரிவதையும் படத்தில் காணலாம்.

### கோயம்பேடு–பரங்கிமலை இடையே

# பணிகள் முடிவடையும் நிலையில் 8 மெட்ரோ ரெயில் நிலையங்கள்

சென்னை, செப்.16–

சென்னை கோயம்பேடு–பரங்கிமலை இடையே 8 மெட்ரோ ரெயில் நிலைய பணிகள் முடியும் நிலையில் உள்ளன. சென்டிரல் மற்றும் ஆலந்தூரில் 2 அடுக்கில் பிரமாண்ட ரெயில் நிலையங்கள் அமைகின்றன.

## சென்னை மெட்ரோ ரெயில்

தமிழகத்தின் தலைநகரமான சென்னையில் பெருகி வரும் மக்கள்தொகையால், நாளுக்குநாள் போக்குவரத்து நெரிசல் அதிகமாகி வருகின்றது. அதனை குறைக்கும் வகையில் திட்டமிடப்பட்டதுதான், மெட்ரோ ரெயில் திட்டம்.

ரூ.14 ஆயிரத்து 600 கோடியில் செலவில், 'மெகா' பட்ஜெட்டில் உருவாக்கப்பட்ட மெட்ரோ ரெயில் திட்டம், 45.1கிலோ மீட்டர் தூரத்திற்கு 2 வழித்தடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன. வண்ணாரப்பேட்டை–சென்னை விமான நிலையம் இடையே 23.1கிலோ மீட்டர் தூரத்திற்கு முதல் வழித்தடமும், சென்டிரல்–பரங்கிமலை இடையே 22 கிலோ மீட்டர் தொலைவிற்கு 2–வது வழித்தடமும் அமைக்கப்படுகிறது.



சென்னை கோயம்பேடு மெட்ரோ ரெயில் நிலையத்தில் முதல் அடுக்கிற்கு செல்லும் படிக்கட்டுகள்.

## வழித்தடங்கள் விவரம்

முதல் வழித்தடத்தில், வண்ணாரப்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை, பூமிக்கு அடியில் சுரங்கப் பாதை வழியாக 11 ரெயில் நிலையங்களை கடந்து வரும் மெட்ரோ ரெயில், சைதாப்பேட்டை கூவம் ஆற்றிற்கு முன்பு, சுரங்கத்தில் இருந்து பறக்கும் பாதையில் பயணிக்க தொடங்குகிறது. அதன்பிறகு, சின்னமலை முதல் சென்னை விமான நிலையம் வரை 6 ரெயில் நிலையங்களை பறக்கும் பாதையிலேயே கடக்கிறது.

இதேபோல், 2–வது வழித்தடத்தில், சென்டிரல் முதல் அண்ணாநகர் டவர் வரை சுரங்கப்பாதை வழியாக 8 ரெயில் நிலையங்களை கடக்கும் மெட்ரோ ரெயில், திருமங்கலத்தில் இருந்து பறக்கும் பாதைக்கு வந்துவிடுகிறது. அதன்பிறகு, கோயம்பேடு வழியாக 8 ரெயில் நிலையங்களை கடந்து பறக்கும் பாதையிலேயே விமான நிலையத்தை சென்றடைகிறது.

## சுரங்கப்பாதை–பறக்கும் பாதை

மெட்ரோ ரெயிலானது 2 வழித்தடங்களிலும், செல்வதற்கு ஒன்றும், வருவதற்கு ஒன்றுமாக 2 பாதைகள் அமைக்கப்படுகின்றன. பறக்கும் பாதையில் வரும் ரெயில்கள் அருகருகே சென்றாலும், பூமிக்கு அடியில் செல்லும் ரெயில்கள், 15 மீட்டர் இடைவெளியில் தனித்தனியாக அமைக்கப்பட்டு வரும் 2 சுரங்கப்பாதைகளில் செல்கின்றன.

மொத்தம் 45.1 கிலோ மீட்டர் தூரம் கொண்ட 2 வழித்தடங்களில், 21.1 கிலோ மீட்டர் தொலைவுக்கு பறக்கும் பாதையிலும், 24 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுரங்கப்பாதையிலும் மெட்ரோ ரெயில்கள் பயணிக்க உள்ளன. இதுவரை, 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுரங்கப்பாதையும், 14 கிலோ மீட்டர் தூரத்திற்கு பறக்கும் பாதையும் அமைக்கப்பட்டுள்ளன.

## சென்டிரல்–ஆலந்தூர்

வண்ணாரப்பேட்டை–சென்னை விமான நிலையம் இடையே முதல் வழித்தடமும், சென்டிரல்–பரங்கிமலை இடையே 2–வது வழித்தடம் அமைக்கப்பட்டாலும், இந்த 2 வழித்தடங்களும் 2 இடங்களில் ஒன்று சேர்கின்றன. அதாவது, சென்டிரலுக்கு அடியில் சுரங்கப்பாதையிலும், ஆலந்தூருக்கு மேல் பறக்கும் பாதையிலும் ஒன்றிணைகின்றன.

அதனால், சென்டிரலில் 40 மீட்டர் ஆழத்தில் 2 அடுக்குகளாக 2 சுரங்க ரெயில் நிலையங்கள் 400 மீட்டர் நீளத்தில் அமைகின்றன. இதேபோல், ஆலந்தூரில் 2 பறக்கும் பாதைகள் ஒன்றுக்கு மேல் ஒன்றாக பிரமாண்டமாக அமைய உள்ளன.

## முடியும் நிலையில் 8 ரெயில் நிலையம்

முதற்கட்டமாக, அடுத்த ஆண்டு (2014) ஜூன் மாதத்திற்குள், 2–வது வழித்தடத்தின் பறக்கும் பாதையில், சென்னை கோயம்பேடு–பரங்கிமலை இடையே மெட்ரோ ரெயில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், கோயம்பேடு, சி.எம்.பி.டி., அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர், ஈக்காட்டுதாங்கல், ஆலந்தூர், பரங்கிமலை ஆகிய 8 ரெயில் நிலைய கட்டுமான பணிகள் விரைவாக நடைபெற்று, முடியும் நிலையில் உள்ளன.

தற்போது, இந்த ரெயில் நிலையங்களில், மேற்கூரை, டிக்கெட் கவுண்டர்கள், எஸ்கலேட்டர்கள் (நகரும் படிக்கட்டு), லிப்ட் வசதி, ஏ.சி. வசதி போன்றவை அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், பிளாட்பாரங்களில் 'டைல்ஸ்' பதிக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன. டிசம்பர் மாதம் இறுதிக்குள், இந்த 8 ரெயில் நிலையங்களின் பணிகளும் முழுமையாக முடிக்கப்பட்டு விடும்.

## சோதனை ஓட்டம் எப்போது?

அதன் பின்னர், 3 மாத காலத்திற்கு இந்தப் பாதையில் மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டு, திட்டமிட்டபடி ஜூன் மாதத்தில் மெட்ரோ ரெயில் இயங்கத் தொடங்கும்.

முன்னதாக, கோயம்பேடு பணிமனையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மெட்ரோ ரெயில், சோதனை ஓட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. 800 மீட்டர் நீளத்திற்கு தண்டவாளம், மற்றும் மின் இணைப்பு பணிகள் முடிந்துவிட்டன. அதனால், அங்கு எந்த நேரத்திலும் மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம் நடைபெறும் நிலையில் உள்ளது.




மெட்ரோ ரெயில் பாதைகளையும், ரெயில் நிலையங்களையும் காட்டும் வரைபடம்.

## ரெயில் நிலைய சிறப்புகள்

★ மெட்ரோ ரெயில் 2 வழித்தடங்களிலும் மொத்தம் 31 ரெயில் நிலையங்கள் அமைய உள்ளன.

★ சுரங்கப்பாதை மற்றும் பறக்கும் பாதையில் அமைய உள்ள ஒவ்வொரு ரெயில் நிலையங்களும் 200 மீட்டர் நீளத்தில் 2 அடுக்குகளாக அமைய உள்ளன.

★ ரெயில் நிலையத்திற்குள் செல்ல பயணிகளுக்கு படி வசதி இருந்தாலும், சுலபமாக செல்ல எஸ்கலேட்டர் வசதியும் (நகரும் படிக்கட்டு), லிப்ட் வசதியும் செய்யப்படுகின்றன.

★ கண் பார்வை இல்லாதவர்கள் சுலபமாக நடமாடும் வகையில், ரெயில் நிலைய தரைத்தளம் முதல் ரெயிலில் ஏறும் வரை, சொரசொரப்பான 'டைல்ஸ்' வரிசையாக பதிக்கப்பட்டுள்ளன.

★ 'குளுகுளு' வசதி செய்யப்பட்ட ரெயில் நிலைய முதல் அடுக்கில் டிக்கெட் கவுண்டர்கள் இருக்கும். அதுவரை யார் வேண்டுமானாலும் செல்லலாம். ஆனால், ரெயில் வரும் அடுத்த அடுக்கிற்கு ரெயில் டிக்கெட் உள்ளவர்கள் மட்டுமே செல்ல முடியும்.

★ எந்த மார்க்கத்தில் செல்லும் ரெயிலில் ஏற வேண்டும் என்று விரும்பும் பயணிகள், முதற் அடுக்கிலேயே அதற்கான பாதையில் செல்லவும். ரெயில் வரும் 2–வது அடுக்கிற்கு சென்றபிறகு, தண்டவாளத்தை கடக்க முடியாது.

★ மெட்ரோ ரெயில் டிக்கெட்டுகள் டோக்கன் வடிவிலேயே வழங்கப்பட உள்ளன. அந்த டோக்கனை 2–வது அடுக்கில் உள்ள எந்திரத்தில் சொருகினால் மட்டுமே, அங்குள்ள கதவு திறக்கப்பட்டு காத்திருப்பு அறைக்குள் நுழைய அனுமதிக்கிறது. ரெயில் வந்தவுடன் அங்கிருந்து வந்து ரெயிலில் ஏறிக்கொள்ளலாம்.

★ ஒவ்வொரு ரெயில் நிலையத்தின் 2 முகப்பு பகுதியிலும் கட்டுப்பாட்டு அறை வைக்கப்பட்டுள்ளன. அதில் உள்ளவர்கள் 'கிரீன்' சிக்னல் காட்டினால் தான், என்ஜின் டிரைவரால் ரெயிலை இயக்க முடியும்.

## மெட்ரோ ரெயில் வசதிகள்

★ வண்ணாரப்பேட்டை–சென்னை விமான நிலையம், சென்டிரல்–பரங்கிமலை இடையே மொத்தம் 42 மெட்ரோ ரெயில்கள் இயக்கப்பட உள்ளன.

★ முதல் கட்டமாக 4 பெட்டிகள் கொண்ட ஒரு ரெயில் மட்டும் பிரேசிலில் இருந்து வந்துள்ளது. மேலும், 8 ரெயில்களும் அங்கிருந்தே வர உள்ளன. மீதமுள்ள 33 ரெயில்கள் ஆந்திர மாநிலம் தடாவில் செய்யப்பட இருக்கின்றன.

★ 'குளுகுளு' வசதி செய்யப்பட்ட மெட்ரோ ரெயில் ஒவ்வொன்றிலும் 1500 பேர் பயணிக்கலாம்.

★ ஒவ்வொரு ரெயில் நிலையத்தையும் ரெயில் வேகமாக கடந்துவிடுவதால், பயணிகள் பெரும்பாலும் நின்று கொண்டு செல்லும் அளவிலேயே ரெயில் பெட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

★ ரெயில்களில் ஆங்காங்கே கேமிராக்கள் வைக்கப்பட்டு பயணிகள் கண்காணிக்கப்பட உள்ளனர். இதனால், குற்றச் செயல்கள் நடைபெற வாய்ப்பு இருக்காது.

★ டிக்கெட் இருந்தால் மட்டுமே ரெயிலில் ஏற முடியும் என்பதால், 'ஏசி' ரெயிலில் 'ஓசி' பயணம் இருக்காது. பிச்சைக்காரர்கள் தொந்தரவுக்கும் இடமில்லை.

★ பயணிகள் ஏறியவுடன் கதவு அடைத்துக் கொள்ளும் என்பதால், படிக்கட்டு பயணமும் இருக்காது, மரணமும் நடக்காது.

★ மெட்ரோ ரெயில் பாதையில், யாரும் தண்டவாளத்தை கடந்து செல்ல வாய்ப்பு இருக்காது என்றாலும், எதிர்பாராத விதமாக அது போன்ற சம்பவம் நடந்தாலும், ரெயிலை உடனடியாக நிறுத்த முடியும்.